[1975 நவம்பர் 10

விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புகள்

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அ) திருச்சி மாவட்டம் ஆலத்தூர் ஒன்றியத்தில் இடூர் பஞ்சாயத்தில் பல விவசாயிகள் விசை ஏற்றத்திற்கு பணம் கட்டியும் மின் இணைப்புகள் கொடுக்கப்படாமல் இருக்கின்றனவா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) முன் காப்புத் தொகை வசூல் செய்யப்பட்ட 64 பேர்களில் ஒருவருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவர் இருக்குமிடம் தெரியவில்லை. 62 பேர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். இதில் ஒருவர் தான் விசையேற்றம் பொருத்தியுள்ளார். ஆனால் அவரும் மின் இணைப்பு பெறுவதற்கான தயார் நிலையில் இல்லை. மற்றவர்கள் இன்னும் விசையேற்றம் பொருத்தவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.